தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது)
அவர்களின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர் திருமதி. சு. அமுதா, பி.காம்.,

ந.க.அ4 –5215–2019 நாள் 24 .03.2023.

பொருள் பொதுப்பணிகள் – நேரடி நியமனம் – – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி –IV போட்டித் தேர்வு – 2015–2016, 2016–2017 மற்றும் 2017–2018–ம் ஆண்டுகளுக்கான தெரிவில் தட்டச்சர் பதவிக்கு தேர்வு செய்யப்பட்ட தெரிவாளர் திருமதி. M. வினோதினி – பணியேற்றது – சாதிச்சான்று மெய்த்தன்மை சரிபார்க்கப்பட்டது – பணிவரன்முறை செய்து உத்தரவிடல் – தொடர்பாக.

படிக்கப் பட்டவை

1. சென்னை, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் செயலர் அவர்களின் கடித எண் 1652–PSD––A–2019 நாள்: 21.02.2019.
2. தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரின் செயல்முறைகள் ந.க.அ4–5215–2019, நாள்: 05.03.2019.
3. இவ்வலுவலக ந.க.அ4–5215–2019, நாள்: 06.08.2020 25.9.2020 மற்றும் பல.
4. சென்னை தமிழ்நாடு மாநில சுஉர்நோக்கு குழு–II செயல்முறைகள் எண் 13440/CV–2(2)/2019–6 நாள் 28.12.2022.
5. இவ்வலுவலகக் கடிதம் எண் ந.க. அ4–5215–2019 நாள் 01.02.2023.
6. சென்னை, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் செயலர் அவர்களின் கடித எண் 1652–PSD–A2–2019 நாள்: 16.02.2023.
7. தொடர்புடைய ஆவணங்கள்.

----

**ஆணை**

பார்வை 1–ல் காணும் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய கடிதத்தின்படி, தூத்துக்குடி மாவட்ட வருவாய் அலகிற்கு, தட்டச்சர் பணியிடத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தெரிவாளர் திருமதி. M. வினோதினி என்பவருக்கு பார்வை 2–ல் காணும் இவ்வலுவலக செயல்முறைகளின்படி பணியிடம் வழங்கப்பட்டு, தனியர் தூத்துக்குடி மாவட்ட வருவாய் அலகில் 06.03.2019 முற்பகல் முதல் தடடச்சராகப் பணிபுரிந்து வருகிறார். பார்வை 1–ல் காணும் தேர்வாணைய கடிதத்தில் பத்தி 13–ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தனியரால் சமர்ப்பிக்கப்பட்ட சாதிச்சான்றின் (தென்காசி கோட்டாட்சித்தலைவரின் சான்று எண் 009820 நாள் 22.12.2001– இந்து மலைக்குறவன் – ST) மெய்த்தன்மை குறித்து தென்காசி மாவட்ட ஆட்சித்தலைவரிடம் பார்வை 3–ல் காணும் இவ்வலுவலக கடிதங்களில் அறிக்கை கோரப்பட்டது.

பார்வை 4–ல் காணும் சென்னை, தமிழ்நாடு மாநில சுஉர்நோக்கு குழு–II–ன் செயல்முறைகளில் தனியர் சமர்ப்பித்துள்ள ST இந்து மலைக்குறவன் சாதிச்சான்று (சான்று எண் 009820 நாள் 22.12.2001) உண்மைத்தன்மை உடையது என்று உறுதி செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. தனியரது பணியினை தட்டச்சர் நிலையில் தனியர் பணியில் சேர்ந்த நாளான 06.03.2019 முற்பகல் முதல் வரன்முறை செய்வது தொடர்பாக தேர்வாணையத்தின் இசைவு கோரப்பட்டதில், பார்வை 6–ல் காணும் கடிதத்தில் தெரிவாளரின் பணியினை தனியர் பணியில் தட்டச்சர் பதவியில் பணியில் சேர்ந்த நாள்

முதல் மற்ற தகுதிகள் சரியாக இருப்பின் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே தூத்துக்குடி மாவட்ட வருவாய் அலகில், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தட்டச்சராகப் பணிபுரிந்து வரும் திருமதி. M. வினோதினி என்பவரது பணியினை, தனியர் பணியில் சேர்ந்த நாளான 06.03.2019 முற்பகல் முதல் "2015–2016, 2016–2017 மற்றும் 2017–2018 ஆண்டுகளுக்கான தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய தொகுதி IV நியமனங்கள் தொடர்பாக சென்னை / மதுரை உயர்நீதிமன்றங்களில் நிலுவையாக உள்ள வழக்குகளின் முடிவுகளுக்குட்பட்டு" தட்டச்சர் நிலையில் வரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

ஒம்– சு. அமுதா,
மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர் (பொது)
தூத்துக்குடி.

பெறுநர்

திருமதி. M. வினோதினி,
தட்டச்சர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
தூத்துக்குடி.

நகல்:

1. செயலாளர்,
   தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்,
   தேர்வாணையச் சாலை, சென்னை 600 003.
2. அ4 இருப்புக் கோப்பு
3. உபரி 1

ஆ.ப.அ.ப.

24/3/2023

அலுவலக மேலாளர் (பொது)

24/3/23